# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்,
சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

**முறையீட்டு மனு எண். 583/நகராட்சி/2016**
**நாள் : 24/12/2018**

**திரு M. குருசாமி,**
**பழனி.** – **முறையீட்டு மனுதாரர்**

**நகராட்சி ஆணையர்,**
**பழனி நகராட்சி,**
**பழனி.** – **எதிர் மனுதாரர்**

பழனி, இந்திரா நகர் மேற்கு, 45–B, கற்பக பவனம் முகவரியில் வசிக்கும் திரு M. குருசாமி அவர்களது 22.07.2016 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 25.07.2016 அன்று பெறப்பட்டு 583/2016 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரர் மற்றும் நகராட்சி அலுவலர்களிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

பழனி, இந்திரா நகர் மேற்கு, 45–B, கற்பக பவனம் முகவரியில் வசிக்கும் திரு M. குருசாமி என்பவர், திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவரின் தலையீட்டின் கீழ் தைப்பூச திருவிழாவை முன்னிட்டு ஐந்து பணிகளை அதாவது அண்ணாநகர் கீழ்மேல் சாலை, இடும்பன் இட்டேரி ரோடு, டவுன் இட்டேரி ரோடு, குளத்து பைபாஸ் சாலை, வடக்கு இரதவீதி மற்றும் கிழக்கு இரதவீதியில் சிமெண்ட் கான்கிரீட் தளம் அமைத்தல் பணிகளை ரூபாய் 1.51 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண்.1821, நாள் 27.11.2015–இல் அனுமதி வழங்கியதன் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, அதில் 30 சதவிகிதத்திற்கு குறைவான ஒப்பந்த புள்ளி வழங்கிய சரவணா கன்ஸ்ட்ரக்ஷன் என்ற ஒப்பந்த தாரருக்கு பணி வழங்கப்பட்டுள்ளது சந்தேகமாக உள்ளது. இவ்வளவு குறைவான ஒப்பந்தப்புள்ளிக்கு பணிகள் எடுத்தால் தரமாக பணிகள் செய்யமுடியுமா என்றும் உண்மையான மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதலாக 30 சதவிகிதம் திட்ட மதிப்பீட்டை உயர்த்தி உள்ளார்களா என்ற சந்தேகம் உள்ளது என்றும் தெரிவித்துள்ளார். மேலும், ரூபாய் 24 இலட்சத்திற்கு திட்டமிடப்பட்ட கிழக்கு இரதவீதி மற்றும் வடக்கு இரத வீதிகளில் தார்ச்சாலை மேம்பாடு செய்து சிமெண்ட் கான்கிரீட் தளம் அமைக்கப்படவேண்டும். ஆனால் ஒப்பந்ததாரர் சிமெண்ட் கான்கிரீட் தளத்தை சீர்படுத்தாமல் தேரோடும் சிமெண்ட் கான்கிரீட் தளத்தை சேதப்படுத்தி அதன் மீது முற்றிலுமாக தார்த்தளம் அமைத்துவிட்டார். இதற்கான மன்ற அனுமதியும் பெறப்படவில்லை. இது தவிர திட்ட மதிப்பீட்டுத் தொகை ரூபாய் 1.51 கோடியில் சுமார் 30 சதவிகிதத்திற்கும் குறைவாக ஒப்பந்தபுள்ளிகள் கோரியதில் மீதி உள்ள சேமிப்புத் தொகை ரூபாய் 45 இலட்சத்தை மேற்படி தொகைக்கு மிகாமல் கூடுதல் பணிகளை மேற்கொள்ளவும், அவ்வாறு மேற்கொண்ட பணிகளை பின்னர் பதிவு செய்யவும் ஒரு உறுப்பினர் ஆட்சேபனையோடு மன்றத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது நகராட்சி விதிமுறைகளுக்கு எதிரானதும் சட்ட விரோதமானதுமாகும். இவைகள் தவிர, பழனி நகர்மன்ற தீர்மான எண். 1980, நாள்

18.02.2016–இன் படி இன்று வரை நிறைவேறாத உழவர் சந்தை, லயன்ஸ் கிளப் சாலை திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டதாக உள்ளதை விசாரிக்கப்படவேண்டும் எனவும், 25–வது வார்டில் லஷ்மிபுரத்தில் சாலைகள் போடும் பொழுது சின்டெக்ஸ் டாங்குகளுக்கு தண்ணீர் செல்ல போடப்பட்ட குழாய்கள் 200 மீட்டருக்கு மேல் உடைக்கப்பட்டு, நகராட்சிக்கு சுமார் ரூபாய் ஐம்பதாயிரம் இழப்பு ஏற்பட்டுள்ளது எனத் தெரிவித்து இதற்கு காரணமாக இருந்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கக் கேட்டுக்கொண்டுள்ளார்.

2. முறையீட்டு மனுதாரர் திரு M. குருசாமி 19.10.2016 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்கள் முன்பாக ஆஜராகி வாக்குமூலம் அளித்துள்ளார். அதில் சரவணா கன்ஸ்ட்ரக்ஷன் என்பவர் ஐந்து பணிகளில் இடும்பேன் ரெட்டேரி சாலைப் பணியை 32.01 சதவிகிதம் குறைவாகவும், அண்ணா நகர் கிழக்கு சாலையை 31.66 சதவிகிதம் குறைவாகவும், கவுண்டர் ரெட்டேரி சாலையை 21.35 சதவிகிதம் குறைவாகவும், குளத்து பைபாஸ் சாலையை 34.37 சதவிகிதம் குறைவாகவும், கிழக்கு இரத வீதி, வடக்கு இரத வீதி தார்ச்சாலை மேம்படுத்த 28.47 சதவிகிதம் திட்ட மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி குறிப்பிட்ட அந்த நிறுவனத்திற்கே ஒப்பந்தப்புள்ளி வழங்கப்பட்டது. விதிகளின் படி எவ்வளவு குறைவாக எடுத்தார்களோ அந்த அளவிற்கு பணியை மட்டுமே செய்யவேண்டும். முழுப்பணியையும் செய்யக்கூடாது. ஏற்கனவே குறிப்பிட்ட ஐந்து பணிகளும் முடிக்கப்பட்டது. பழனி நகராட்சியின் கணக்காளர் திரு முத்துக்குமார் என்பவரோடு ஒப்பந்ததாரர் சரவணா கன்ஸ்ட்ரக்ஷன் ஆகிய இருவருக்கும் தகராறு ஏற்பட்டு காவல்நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. நகர்மன்ற ஒப்புதல் பெறாமல் பணி செய்வதற்கான ஆணை சரவணா கன்ஸ்ட்ரக்ஷன் நிறுவனத்திற்கு விதிகளை மீறி ஒப்புதலின்றி கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் இன்று வரை பணம் பட்டுவாடா செய்யப்படவில்லை. கிழக்கு இரதவீதி, வடக்கு இரதவீதியில் சிமெண்ட் கான்கிரீட் அதன் மேல் தார் போடுவதாகும். ஆனால் இவர்கள் முற்றிலுமாக தார்ச்சாலை அமைத்துள்ளார்கள். தனியாரிடத்தில் கவுண்டர் ரெட்டேரி ரோடு அருகில் தார்ச்சாலை அமைத்துள்ளார்கள்.

3. திரு கி. வெங்கடேசன், மேலாளர் மற்றும் நகராட்சி ஆணையர், பழனி அவர்கள் 14.11.2016 மற்றும் 24.01.2017 ஆகிய நாட்களில் நடைபெற்ற விசாரணைக்கு ஆஜராகி வாக்குமூலம் அளித்துள்ளார். மனுதாரருடைய புகாரினை மீண்டும் படித்து ஒரு வார காலத்திற்குள் அறிக்கை சமர்ப்பிப்பதாக 14.11.2016 அன்றைய வாக்குமூலத்தில் தெரிவித்தார். அதன்படி அவர் தனது 25.11.2016 நாளிட்ட கடிதத்தில் விளக்கத்தினை அளித்துள்ளார். 24.11.2017 அன்று மீண்டும் விசாரணைக்கு ஆஜராகி, அவரின் 25.11.2016 நாளிட்ட கடிதத்தினையே வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளுமாறு தெரிவித்துள்ளார். பழனி நகராட்சி தைப்பூசத் திருவிழாவை முன்னிட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் வழங்கிய அறிவுரையினைத் தொடர்ந்து கீழ்க்கண்ட ஐந்து பணிகளை ரூபாய் 1.51 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள நகர் மன்ற அனுமதி வழங்கியதின் அடிப்படையில் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது:-

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை இலட்சத்தில் |
|---|---|---|
| (1) | திண்டுக்கல் சாலை பழனி பேருந்து நிலையம் முதல் வையாபுரி குளம் பைபாஸ் சாலை | 35.00 |
| (2) | இடும்பன் இட்டேரி சாலையினை தார்ச் சாலையாக மாற்றுதல் | 28.00 |
| (3) | கவுண்டர் ` இட்டேரி சாலையினை மேம்பாடு செய்தல் | 35.00 |
| (4) | அண்ணாநகர் பிரதான சாலை, பள்ளி விளையாட்டு மைதானத்திலிருந்து கீழ்மேலாக செல்லும் சாலை மேம்பாடு செய்தல் | 29.00 |
| (5) | கிழக்கு இரத வீதி மற்றும் வடக்கு இரத வீதிகளில் தார்ச்சாலை மேம்பாடு செய்து சிமெண்ட் கான்கிரீட் அமைக்கும் பணி | 24.00 |
| | **மொத்தம்** | **151.00** |

4. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் நகராட்சி விதிகளின்படி குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s சரவணா கன்ஸ்ட்ரக்சன் நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்க மன்றத்தின் முடிவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் நகர்மன்றம் தனது தீர்மானம் எண்கள் 1892, 1893,1894,1895 மற்றும் 1896, நாள் 31.12.2015–இல் ஒவ்வொரு மதிப்பீட்டிற்கும் அந்தந்த பணிகளில் உள்ள சேமிப்புத் தொகையில் அதே சாலை முழு அளவிற்கு விரிவாக்கம் செய்து கொள்ளவும், பைப் லைன் கட்டிங் மற்றும் தொடர்சாலையில் இதே மதிப்பீட்டில் பணி செய்து கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டது. மன்றத் தீர்மானத்தின் அடிப்படையில் 04.01.2016 அன்று மதிப்பீட்டின் முழு தொகைக்கும் பணி மேற்கொள்ள உத்தரவு வழங்கப்பட்டு பணி முடிக்கப்பட்டது. நகராட்சி பணி ஆய்வர், பணி மேற்பார்வையாளர், உதவி பொறியாளர், நகராட்சிப் பொறியாளர்கள் முன்னிலையில் பணி தரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரக செயற்பொறியாளர் அவர்களும் நேரடி ஆய்வுகள் மேற்கொண்டு அறிவுரைகள் வழங்கி பணி தரமாக முடிக்கப்பட்டுள்ளது. பொதுப்பணித் துறை மற்றும் நெடுஞ்சாலைத்துறை செந்தர வீத பட்டியலின் படி மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. அனைத்து சாலைப் பணிகள் நடைபெற்றபோதும் உரிய தரப்பரிசோதனைகள் பழனியாண்டவர் பாலிடெக்னிக் மூலம் செய்யப்பட்டு அதற்கான சான்று பெறப்பட்டு தரம் உறுதி செய்யப்பட்டது.

5. பட்டியலில் உள்ள வரிசை எண்.5–இல் குறிப்பிடப்பட்டுள்ள சாலை முழு தார்ச்சாலையாகும். சாலையில் தேர்ச்சக்கரம் செல்ல மட்டும் இரண்டு தனித் தனி கான்கிரீட் தளம் ஏற்கனவே ஓடுபாதை இரண்டு மீட்டர் அகலத்திற்கு அமைக்கப்பட்டு நடுப்பகுதி மற்றும் இரண்டு பக்கப் பகுதிகளும் தார்ச்சாலையாக உள்ளதனை இரண்டு சக்கீரத்திற்கான ஓடுபாதைக்கு நடுப்பகுதி கான்கிரீட் தளம் அமைக்கவும், தேர்ச்சக்கரம் ஓடும் பாதை வெளி இரண்டு பகுதிக்கு தார்ச்சாலை அமைக்கப்பட வேண்டும். ஆனால், நகர்மன்றத் தலைவர், ஆணையாளர், நகர் மன்ற உறுப்பினர்கள் 05.01.2016 அன்று நகராட்சி மண்டல செயற்பொறியாளர் அவர்கள் ஆய்வின்போது தேர்ஓடும் பாதை கான்கிரீட் தளத்திற்கு மட்டும் நடுவில் தார்த் தளமாக ஏற்கனவே உள்ளதால் சாலையினை வெட்டி கான்கிரீட் தளம் அமைத்து பக்கப்பகுதிகள் தார்த்தளம் அமைக்கும்போது சாலை நடுப்பகுதி பள்ளமாகவும் இரண்டுபக்க பகுதி மேடாகவும் அமையும். எனவே, முழுப்பகுதியினையும் தார்த்தளமாக அமைத்துக் கொடுக்க நேரடியாக கேட்டுக்கொண்டதின் பேரில் சாலையின் நடுப்பகுதி மட்டும் கான்கிரீட் தளம் அமைப்பதற்கு பதிலாக முழு சாலை அகலத்திற்கும் தார்ச்சாலையாகவே அமைத்து பணி முடிக்கப்பட்டுள்ளது. தேர் செல்லும் கான்கிரீட் பாதை எவ்வகையிலும் சேதப்படுத்தப்படவில்லை. இதன் விவரம் நகர்மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டு நகர் மன்ற தீர்மானம் எண்.1980, நாள் 18.02.2016–இல் பதிவு செய்துள்ளது. இப்பணிகள் அனைத்தும் நகராட்சி பொது நிதியில் மன்றத்தின் அதிகார வரம்பிற்குள் எடுத்து செய்யப்பட்ட பணியாகும். 30 சதவிகிதம் ஒப்பந்தப்புள்ளி விலை குறைவாக கொடுத்ததால் நகராட்சிக்கு ரூபாய் 45 இலட்சம் சேமிப்பு ஏற்பட்டு, அத்தொகையில் அதே ஒப்பந்த புள்ளி விலை விகிதத்தில் பணி மேற்கொண்டதால், மேலும், ரூ.14 இலட்சம் சேமிப்பாகும். மேலும், ரூ.2.10 கோடி மதிப்புள்ள பணிகள் ரூ.1.48 கோடி செலவிற்குள் தரமாக மேற்கொள்ளப்பட்டது. எனவே, இப்புகார் பொய்யானதாகும் எனத் தெரிவித்துள்ளார்.

6. நகர் மன்ற தீர்மானங்களின் படி கூடுதலாக செய்த பணிகளுக்கு நகர் மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டு அங்கீகரித்த பின்னரே கூடுதலாக மேற்கண்ட பணிகளை சேர்த்து இரண்டாவது பகுதி பட்டியல் தயார் செய்து 23.03.2016–இல் சரிபார்க்க கணக்கருக்கு அனுப்பப்பட்டது. கணக்கர் ஒவ்வொரு பணிக்கான கோப்பிலும் குறைகள் உள்ளதென சுட்டிக் காட்டி திருப்பியதின் காரணமாக 24.03.2016 அன்று ஒப்பந்தகாரருக்கும் கணக்கருக்கும் தகராறு ஏற்பட்டது. மேலும், தைப்பூச பக்தர்கள் போக்குவரத்திற்கு பயன்படும் வகையில் சாலை அமைத்து பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டிய சூழ்நிலையில், நகர்மன்றத் தலைவர் மற்றும் உயர் அதிகாரிகளால் ஆய்வு செய்யப்பட்டு, உத்தரவுகள் வழங்கப்பட்டு அதன் படி பணிகள் மேற்கொள்ளப்பட்டன என்று தெரிவித்துள்ளார்.

7. தைப்பூசத் திருவிழாவை முன்னிட்டு மாவட்ட ஆட்சித் தலைவரின் அறிவுறுத்தலின் படி மேலே பத்தி 3–இல் குறிப்பிடப்பட்டுள்ள ஐந்து பணிகளும் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. ஐந்து பணிகளிலும் சராசரியாக 30 சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியதின் காரணமாக வரிசை எண்.1–இல் குறிப்பிட்டுள்ள பணிக்கு ரூபாய் 10.63 இலட்சமும் வரிசை எண்.2–இல் குறிப்பிட்டுள்ள பணிக்கு ரூ.8.96 இலட்சமும் வரிசை 3–இல் குறிப்பிட்டுள்ள பணிக்கு ரூ.10.27 இலட்சமும், வரிசை எண்.4–இல்

குறிப்பிட்டுள்ள பணிக்கு ரூ.9.18 இலட்சமும் மற்றும் வரிசை எண்.5–இல் குறிப்பிட்டுள்ள பணிக்கு ரூ.6.82 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.45.86 இலட்சம் சேமிப்பு ஏற்பட்டுள்ளது. இந்த சேமிப்புத் தொகைரூ. 45.86 இலட்சத்திற்கு விதிகளின் படி, புதிய பணிகள் தேர்ந்தெடுத்து மதிப்பீடு தயார் செய்து, நகர்மன்ற அனுமதி பெற்று வேலையினை ஆரம்பித்திருக்க வேண்டும். மாறாக ஏற்கனவே, 27.11.2015 நாளிட்ட தீர்மானத்தில் அங்கீகரிக்கப்பட்ட அந்தந்த பணிகளில் ஏற்பட்ட சேமிப்புத் தொகையில் அதே சாலை முழு அளவிற்கு விரிவாக்கம் செய்து கொள்ளவும் பைப் லைன் கட்டிங் மற்றும் தொடர் சாலையில் இதே மதிப்பீட்டில் பணி செய்து கொள்ளவும் மன்றம் தீர்மானித்தது நடைமுறை விதிகளுக்கு முரணானதாக கருதப்படுகிறது. நகராட்சி விதிகளின்படி நகர்மன்றம் தவறுதலாக தீர்மானம் இயற்றினாலும் விதிமுறைகளைச் சுட்டிக் காட்டி, மீள நகர் மன்றத்திற்கு சமர்ப்பித்திருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு செய்யாமல் ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் பணிகளை முடித்து பணப்பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது முறையற்றதாக கருதப்படுகிறது. மேலும், வரிசை எண்.5–இல் குறிப்பிடப்பட்டுள்ள கிழக்கு இரத வீதி மற்றும் வடக்கு இரத வீதிகளில் தார்ச்சாலை மேம்பாடு செய்து சிமெண்ட் கான்கிரீட் அமைக்கும் பணிக்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி சாலையில் கான்கிரீட் தளம் அமைக்காமல் முழுவதும் தார்ச்சாலையாக அமைக்கப்பட்டுள்ளது. கான்கிரீட் சாலைக்கு பதிலாக தார்ச்சாலை அமைக்குமுன்னர் புதிய மதிப்பீடு தயார் செய்து பணி முடித்து அதன் விவரத்தை நகர்மன்ற பார்வைக்கு வைக்கவில்லை. இதுவும் முறையற்றதாகவே கருதப்படுகிறது. இந்நிகழ்வுகளுக்கு பொறுப்பான நகராட்சி அலுவலர்களிடமிருந்து விளக்கம் பெற்று மேல் நடவடிக்கை தொடர நகராட்சி நிர்வாக ஆணையருக்கு பரிந்துரை செய்யலாம் என முடிவெடுத்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2018– ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள், 24–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப் படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

மு. பழனிவேல்
செயலாளருக்காக.

27.12.18

பெறுநர்

1. திரு M. குருசாமி,
   45 B, கற்பக பவனம்,
   இந்திரா நகர் மேற்கு,
   பழனி – 624 601.

2. நகராட்சி ஆணையர்,
   பழனி நகராட்சி,
   பழனி.

3. நகராட்சி நிர்வாக ஆணையர்,
   சேப்பாக்கம்,
   சென்னை – 600 005.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி